# பி.எஸ்.ஜி.கலை அறிவியல் கல்லூரி

An Autonomous college-Affiliated to Bharathiar University
Accrediated with A++ Grade by NAAC
College with potential for excellence
(status Awarded by the DBT –MST)
An ISO 9001:2008 Certified Institution.

**கோயம்புத்தூர் - 641 014.**

## கல்வெட்டியல் பட்டய வகுப்பு (2023 -2024)

**(ஓராண்டு)**

## Diploma in Epigraphy

## அறிவிப்பு மடல்

**பேரன்புடையீர்! அனைவருக்கும் வணக்கம்.**

தமிழ்த்துறை சுயநிதிப் பிரிவின் கீழ் இயங்கும் 'கல்வெட்டியல் பட்டயவகுப்பு' (2023-2024) ஆம் ஆண்டிற்கான சேர்க்கை தொடங்கவுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இப்பட்டய வகுப்பில் +2 தேர்ச்சி பெற்ற யாவரும் கலந்து கொண்டு பயனடைந்து சான்றிதழ் பெறலாம். நம் கல்லூரியின் அனைத்துத் துறை மாணவர்களும் இப்பட்டய வகுப்பில் கலந்து கொள்ளலாம். மேலும், இத்துறையினைச் சார்ந்த ஆர்வலர்கள் கல்லூரிக்கு வெளியில் இருந்தும் வகுப்பில் கலந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப் படுகின்றது.

**பி.எஸ்.ஜி. கல்விப்புலமும் கல்வெட்டியல் துறை செயல்பாடும்**

கல்விப்புலச் சிந்தனையாளர் மாண்பமை திரு.பி.எஸ்.கோவிந்தசாமி நாயுடு அவர்களின் பெயரால் தொடங்கப்பெற்ற அறக்கட்டளையின் கீழ் 1947-ஆம் ஆண்டு உருவாக்கப் பெற்ற சிறந்ததோர் கல்வி நிறுவனம் பி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரி. இந்நிறுவனம் கலை மற்றும் அறிவியல் புலத்தில் தொலைநோக்குச் சிந்தனையோடு செயல்படுவதோடு மட்டுமல்லாமல் அடிப்படைக் கல்வியையும் ஆராய்ச்சிக் கல்வியையும் மாணவர்களுக்கு ஒருங்கே புகட்டி வருகின்றது. கற்றல்-கற்பித்தல் என்ற அறிவுலகச் செயல்பாட்டில் விஞ்ஞானத்துடன் மெய்ஞானத்தையும் வழங்கி வருவது கூடுதல் சிறப்பு. எண்ணிலடங்காச் சாதனையாளர்களையும் சிந்தனையாளர்களையும் உலகிற்கு வழங்கிய இக்கல்லூரியில் தற்பொழுது 47 இளங்கலைப் பட்டப் படிப்புகளும் 28 முதுகலைப் பட்டப்

படிப்புகளும் 03 முதுகலைப் பட்டயப் படிப்புகளும் 24 ஆய்வியல் படிப்புகளும் ஆக்கப் பூர்வமான முறையில் வழங்கப் பெற்று வருகின்றன. பல்கலைக்கழக மானியக்குழுவினால் 1978-ஆம் ஆண்டு தன்னாட்சி பெற்ற இக்கல்லூரி 1982-ஆம் ஆண்டு முதல் பாரதியார் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது. **ISO** மற்றும் **NIRF** தரவரிசையில் சிறந்த இடங்களைப் பெற்றிருப்பதோடு தேசியத் தர மதிப்பீட்டு நிர்ணயக் குழுவினால் **(NAAC - A++)** உயர்நிலை அங்கீகாரம் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தகு சிறப்பு வாய்ந்த நம் கல்லூரியில் 2003-ஆம் ஆண்டு முதல் கல்வெட்டியல் துறை ஓராண்டு பட்டயப் படிப்பினை மாணவர்களுக்கு நன்முறையில் வழங்கி வருகின்றது. கொரோனா பேரிடர் காலக்கட்டங்களில் தமிழகத்தின் முன்னணி தொல்லியல் ஆய்வாளர்களை இணையவழியில் அழைத்து 07 தொடர் சொற்பொழிவுகளை **'அகழ்'** என்ற தலைப்பில் நிகழ்த்தியுள்ளது. 2022-இல் 'பெயல்' ஆய்விதழுடன் (பல்கலைக்கழக மானியக்குழு ஆய்விதழ்) இணைந்து தொல்லியல்-கல்வெட்டியல் ஆய்வாளர்களுக்கு **ஆய்வரங்கம் (Colloquium)** ஒன்றைத் **'தொல்லியல் ஆய்வுக்களங்கள்-நேர்மை/கூர்மை/வளமை'** என்ற தலைப்பில் செம்மையுற நிகழ்த்தியது குறிப்பிடத்தக்கது. **2023-2024** ஆம் கல்வியாண்டில் **27 மாணவர்கள்** பட்டய வகுப்பில் பயின்று முதல் வகுப்பில் தேர்ச்சி அடைந்துள்ளனர். **5 கள ஆய்வுகள்** நன்முறையில் மேற்கொள்ளப் பெற்றது. கோயம்புத்தூர் அரசு அருங்காட்சியகத் துறையோடு இணைந்து **கல்வெட்டு மைப்படியெடுத்தல் பயிலரங்கம்** ஒன்றும் நிகழ்த்தப் பெற்றது. இப்பட்டய வகுப்பில் ஆய்வாளர்கள், பேராசிரியர்கள் ஆர்வமுள்ள மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு பயனடையுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**விதிமுறைகள்**

1.வகுப்புகள் வாரத்தின் இறுதி நாட்களில் நடைபெறும்.

2.காலை 10:00 மணி முதல் மாலை 4:00 மணி வரை வகுப்பு நடைபெறும்.

3.தமிழ்த்துறை மற்றும் தமிழ்த்துறை அல்லாத பிறதுறை மாணவர்கள், கல்லூரிக்கு வெளியில் இருந்து வரக்கூடிய கல்வெட்டியல் ஆர்வலர்கள், பிற கல்லூரி மாணவர்கள் என யாவரும் இப்பட்டய வகுப்பில் கலந்து கொள்ளலாம்.

4.வருகைப்பதிவு 80% கட்டாயம் இருத்தல் வேண்டும்.

5.அகமதிப்பீடு(CA) தேர்வுகளில் மாணவர்கள் கட்டாயம் பங்கேற்க வேண்டும்.

6.நடைபெறும் மூன்று கள ஆய்வுகளில் (Field visit) மாணவர்கள் இரு களஆய்வில் கட்டாயம் கலந்து கொள்ளுதல் வேண்டும். ஒரு திட்டப்பணி (project) ஒப்படைத்தல் வேண்டும்.

7.வகுப்புகளைக் கல்வெட்டியல் பொறுப்பாசிரியர்கள் எடுப்பர். ஒவ்வொரு பருவத்திலும் குறைந்தது இரண்டு வல்லுனர்கள் அழைக்கப்பெற்றுச் சிறப்புச் சொற்பொழிவுகள் வழங்கப்படும்.

8.களஆய்விற்குச் சென்றுவரும் செலவினங்கள் (போக்குவரத்து,உணவு, தங்குமிடம்), திட்டப்பணிச் செலவினங்கள் மாணவர்களைச் சார்ந்தது.

9.இரு அகமதிப்பீட்டுத் தேர்வுகள் நடைபெறும்.

10.இப்பட்டயப் படிப்பிற்கு வயது வரம்பு இல்லை. 12-ஆம் வகுப்புத் தேர்ச்சி போதுமானது. SSLC மற்றும் +2 சான்றிதழ் நகல் மாணவ-மாணவியர் சுயவிவரக் குறிப்புடன் விண்ணப்பத்தில் இணைக்கப் பெறுதல் வேண்டும்.

11.விண்ணப்பப் படிவத்தை நேரிலோ அல்லது கல்லூரியின் இணையதளப் பக்கத்திலோ பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

12.கல்விக்கட்டணம் ரூ.5000. கட்டணத்தை ஒரே தவணையில் செலுத்த வேண்டும்.

13.அனைத்து நடைமுறைகளும் கல்லூரியின் விதிமுறைகளுக்கு உட்பட்டே அமையும். மாணவர்கள் கல்லூரியின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடத்தல் வேண்டும்.

**கல்விக்கட்டணம் & கட்டணம் செலுத்த வேண்டிய வங்கி விவரம்**

கல்விக்கட்டணம் ரூ.5000.

A/C No: 2988101009008

IFSC Code: CNRB0002988

Branch: PSGCAS, Coimbatore.

Address: psgcas, Coimbatore-641 014.

**மேலும் விவரங்களுக்குக் கீழ்க்கண்ட பேராசிரியர்களைத் தொடர்பு கொள்ளலாம்.**

முனைவர் க.பாலாஜி,
கல்வெட்டியல் பட்டய வகுப்பு ஒருங்கிணைப்பாளர்,
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பி.எஸ்.ஜி.கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர் - 641 014.
அலைபேசி: 9600293232.
மின்னஞ்சல்: balajiand@gmail.com, balajig@psgcas.ac.in

முனைவர் கோ.வசந்திமாலா,
இணைப்பேராசிரியர் & துறைத்தலைவர்,
தமிழ்த்துறை,
பி.எஸ்.ஜி.கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர் – 641 014.
அலைபேசி: 9994575370
மின்னஞ்சல்: vasanthimalag@psgcas.ac.in

முனைவர் ந.இராஜேந்திரன்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பி.எஸ்.ஜி.கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர் – 641 014.
அலைபேசி: 9597536324.
மின்னஞ்சல்: rajendrann@psgcas.ac.in